வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி 04.07.2025 நேரம் மாலை 6.10 மணி

---------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு. நரேந்திர மோடி, 5 நாடுகள் பயணத்தின் 3ஆம் கட்டமாக இன்று, அர்ஜென்டினா செல்கிறார்.

டிரினிடாட்டில் வசிக்கும் ஆறாம் தலைமுறை இந்திய சமூகத்தினருக்கு, கடல்கடந்த இந்தியப் பிரஜைகளுக்கான OCI அட்டை வழங்கப்படும் என, பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்துள்ளார்

தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின் அமலாக்கத்தில், முன்னணி மாநிலமாக புதுச்சேரி மேம்பட்டுள்ளது.

புதுச்சேரியில் முதல் முறையாக, கார்டிலா என்னும் சுற்றுலா சொகுசு கப்பல், சென்னையிலிருந்து விசாகப்பட்டினம் வழியாக, இன்று புதுச்சேரி வந்துள்ளது.

*மோடி-அர்ஜென்டினா-*

பிரதமர் திரு. நரேந்திர மோடி, 5 நாடுகள் பயணத்தின் 3-ஆம் கட்டமாக இன்று, ட்ரினிடாட்-டொபாகோவில் இருந்து, அர்ஜென்டினா செல்கிறார். அவர் இப்பயணத்தின் போது, அர்ஜென்டினா அதிபர் திரு. சேவியர் மிலே-யுடன், இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்துவார். பாதுகாப்பு, விவசாயம், சுரங்கம், எண்ணெய்-எரிவாயு, புதுப்பிக்கவல்ல எரிசக்தி, வர்த்தகம் உள்ளிட்ட முக்கிய துறைகளில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து, இருதலைவர்களும் விவாதிக்க உள்ளனர். கடந்த 57 ஆண்டுகளில், இந்திய பிரதமர் ஒருவர்

அர்ஜென்டினா செல்வது, இதுவே முதல் முறையாகும். இந்தியா-அர்ஜென்டினா உறவுகள் குறித்து ஒரு செய்தி தொகுப்பு …………………..

(வாய்ஸ்)

*மோடி-அர்ஜென்டினா*

(வாய்ஸ்)

லத்தீன் அமெரிக்காவில், இந்தியாவின் முக்கிய பொருளாதாரக் கூட்டாளி நாடாகவும், ஜி-20 கூட்டமைப்பில் நெருங்கிய ஒத்துழைப்பு நாடாகவும், அர்ஜென்டினா திகழ்கிறது. இருநாடுகளுக்கும் இடையே பல்வேறு துறைகளில் நீண்டகாலமாக நிலவும் உறவுகள், கடந்த சில பத்தாண்டுகளில், மேலும் ஆழமாகி உள்ளன. உலகப் பொருளாதாரத்தில் இந்தியாவின் நிலை, இந்தியாவை முக்கிய நாடாக மேம்படுத்துவதாக இந்தியாவிற்கான அர்ஜென்டினா தூதர் திரு மரியானோ காசினோ கூறி உள்ளார். இருநாடுகளும், தூதரக ரீதியிலான பரஸ்பர உறவுகளின் 75-ஆம் ஆண்டை, கடந்த ஆண்டில் கொண்டாடியதும் குறிப்பிடத் தக்கது.

*மோடி-டிரினிடாட்*

டிரினிடாட்டில் 6-ஆம் தலைமுறையாக வசித்து வரும் இந்திய சமூகத்தினருக்கு, கடல்கடந்த இந்தியப் பிரஜைகளுக்கான OCI அட்டை வழங்கப்படும் என, பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்துள்ளார் டிரினிடாட் நாட்டில் உள்ள இந்திய சமூகத்தினரிடையே பேசுகையில், அவர் இதை அறிவித்தார். OCI அந்தஸ்து வழங்கப்படுவதால் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த டிரினிடாட் இளைஞர்கள், ஸ்டார்ட்-அப் சூழல் உட்பட இந்தியாவின் பல்வேறு வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்ள ஏதுவாகும் என்று அவர் கூறினார். கரீபியன் பிராந்தியத்தில், இந்தியாவின் யுபிஐ - டிஜிட்டல் பண பரிமாற்ற வசதியை பயன்படுத்தும் முதல் நாடாக, டிரினிடாட் திகழ்வதையும், பிரதமர் பாராட்டினார்.

*சிறு தொழில்*

நாட்டின் சிறு-குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் கடந்த 10 ஆண்டுகளில் 28 கோடிக்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகளை உருவாக்கி இருப்பதாக, MSME துறைக்கான மத்திய அமைச்சர் திரு ஜித்தன்ராம்

மாஞ்சி கூறி உள்ளார். இன்று மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பதிவு பெற்ற MSME நிறுவனங்களின் எண்ணிக்கை கடந்த 5 ஆண்டுகளில், 6.53 கோடியாக, 5 மடங்கு அதிகரித்து இருப்பதாக தெரிவித்தார். நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இத்துறையினர் 30 சதவிகிதம் பங்களிப்பதாகவும், ஏற்றுமதியில் இத்துறையினரின் பங்களிப்பு, 45.7 சதவிகிதம் என்றும் அவர் கூறினார். பிரதமரின் வேலை வாய்ப்பு பெருக்க திட்டத்தின் கீழ் இதுவரை 80 லட்சத்திற்கும் மேற்பட்ட வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். இதில் 80 சதவிகித வேலை வாய்ப்புகள் கிராமப்புறங்களில் உருவாகி இருப்பதாக அவர் கூறினார். பிரதமரின் விஸ்வகர்மா திட்டத்தின் கீழ், பதிவு பெற்ற சுமார் 10 லட்சம் கைவினைக் கலைஞர்கள், உபகரண உதவிகளால் பயன் பெற்றுள்ளதாக அவர் மேலும் கூறினார்.

*மாண்டவியா*

ஃபிட் இண்டியா இயக்கத்தின் கீழ், 30-ஆவது சைக்கிள் சண்டே நிகழ்வுகள் வரும் ஞாயிற்றுக்கிழமை நாடெங்கிலும் 6 ஆயிரம் இடங்களில் நடைபெற உள்ளன. அந்தந்த பகுதிகளைச் சேர்ந்த குடியிருப்போர் நலச் சங்கங்களின் ஆதரவுடன் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, உடல் ஆரோக்கியத்திற்கான இந்த மிதிவண்டிப் பயணங்களில், மொத்தம் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்க உள்ளனர். புதுடெல்லியில் நடைபெறும் பிரதான மிதிவண்டி பயணம், தலைநகரின் மேஜர் தியான்சந்த் தேசிய விளையாட்டு அரங்கில் இருந்து தொடக்கி வைக்கப்படும். ஃபிட் இண்டியா சைக்கிள் சண்டே நிகழ்வுகள், படிப்படியான முறையில், மக்கள் இயக்கமாக மேம்பட்டு வருவதாக, மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு மன்சுக் மாண்டவியா கூறி உள்ளார். அனைத்து மக்கள் மற்றும் சமூகங்களும் இந்நிகழ்வுகளில் பங்கேற்று, சைக்கிள் பயணம், யோகா போன்ற செயல்பாடுகள் மூலம், வாழ்க்கை முறை நோய்களைத் தவிர்த்து, உடல் தகுதியை வளர்த்துக் கொள்ள வேண்டுமென, அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

*க்யூட்-தேர்வு*

மத்திய பல்கலைக்கழகங்கள் மற்றும் பல்வேறு உயர்கல்வி நிறுவனங்களின், இளங்கலை மற்றும் முதுகலை மாணவர் சேர்க்கைக்கான, க்யூட்-நுழைவுத் தேர்வு முடிவுகளை, தேசிய தேர்வு முகமை இன்று வெளியிட்டுள்ளது.

*புதுச்சேரி-காசநோய்*

தேசிய காசநோய் ஒழிப்பு திட்டத்தின் அமலாக்கத்தில் முன்னணி மாநிலமாக புதுச்சேரி மேம்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளில் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் காசநோய் பாதிப்பு, 59 சதவிகிதம் குறைந்துள்ளது. காசநோய் பரிசோதனைகளின் எண்ணிக்கை 136 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

மத்திய சுகாதார அமைச்சகம் மூலமான ஏற்பாட்டின் கீழ், 2 நாள் பயணமாக புதுச்சேரி வந்துள்ள, தேசிய அளவிலான 10 உறுப்பினர் ஊடக குழுவினருக்கு, புதுச்சேரி மாநிலத்தின் காசநோய் ஒழிப்பு முயற்சிகள் குறித்து அதிகாரிகள் அளித்த படவிளக்கத்தில், இத்தகவல்கள் வெளியாயின. தேசிய சுகாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் டாக்டர் கோவிந்தராஜன், மாநில காசநோய் அதிகாரி டாக்டர் வெங்கடேஷ் ஆகியோர் இத்தகவல்களை வெளியிட்டனர்.

புதுச்சேரி யூனியன் பிரதேசத்தில் கடந்த ஆண்டு 8 கிராமங்கள் காசநோய் இல்லாத கிராமங்களாக அறிவிக்கப் பட்டதாகவும், இவ்வாண்டு 40 கிராமங்கள், காசநோய் இல்லாத கிராமங்களாக அறிவிக்கப்படும் என தாங்கள் நம்புவதாகவும் இவர்கள் கூறினர். காசநோய் கண்டுபிடிப்பு மற்றும் நோய் ஒழிப்பு தொடர்பாக புதுச்சேரியில் பின்பற்றப்படும் சிறந்த நடைமுறைகள் குறித்து டாக்டர் கோவிந்தராஜன் பேசுகையில் ………….

(வாய்ஸ்-கோவிந்தராஜன்)

*புதுச்சேரி-காசநோய்*

தேசிய அளவிலான ஊடக குழுவினர், இன்று, வில்லியனூரில் உள்ள ஆயுஷ் ஆரோக்கிய மந்திரில், காசநோயை வெற்றி கொண்ட TB சாம்பியன்கள், காசநோயாளிகளுக்கு தேவையான உதவிகளை

வழங்கும் Nikshay மித்ராக்கள், ஆஷா பணியாளர்கள், மற்றும், காசநோய் சிகிச்சைக்கான முதுநிலை மேற்பார்வையாளர்களை சந்தித்து, கலந்துரையாடல் நடத்தினர்.

சொகுசு கப்பல்

சென்னையிலிருந்து விசாகப்பட்டினம் வழியாக இன்று, முதல் முறையாக புதுச்சேரிக்கு வந்து சேர்ந்த, கார்டிலா என்னும் சுற்றுலா சொகுசுக் கப்பலின் பயணிகளை சுற்றுலாத் துறை செயலர் திரு. மணிகண்டன் பூங்கொத்து கொடுத்தும், பாரம்பரிய முறையில் பட்டு துண்டு அணிவித்தும் வரவேற்றார். சொகுசு கப்பலில் வந்த ஆயிரத்து 200 சுற்றுலா பயணிகள் முன்னதாக சிறு படகு மூலம் துறைமுகத்திற்கு அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து இவர்கள் சுற்றுலா துறை மூலம் புதுச்சேரி சுற்றுலா தலங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். சுற்றுலா பயணிகள் இன்று மாலை மீண்டும் துறைமுகம் திரும்பி, சொகுசுக் கப்பல் மூலம் இன்று இரவே சென்னைக்கு புறப்பட உள்ளனர்.

வரவேற்பு நிகழ்ச்சிக்குப் பின்னர் சுற்றுலா துறை செயலர் திரு. மணிகண்டன், செய்தியாளர்களிடம் பேசுகையில், வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் சொகுசுக் கப்பல் புதுச்சேரிக்கு வரும் என்றும், சொகுசுக் கப்பல் வருவதால், சுற்றுலா மேம்படும் என்றும் கூறினார். இதனால் மீனவர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது என்றும் அவர் தெரிவித்தார்.

திரு மணிகண்டன் பேட்டியில் இருந்து ஒரு பகுதி ..................

(வாய்ஸ்-மணிகண்டன்)

புதுச்சேரி-துப்புரவு

கழிவு நீர் தொட்டிகளை சுத்திகரிக்கும் பணிகளின் இயந்திரமயம் குறித்த மத்திய சமூக நீதி அமைச்சகத்தின் நமஸ்தே திட்டத்தின் கீழ் புதுச்சேரியில் தேர்ந்தெடுக்கப்பட்ட 243 தொழிலாளர்களுக்கு, தனிநபர் பாதுகாப்பிற்கான உபகரண தொகுப்புகளை, இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி வழங்கினார். சட்டப்பேரவை தலைவர் திரு ஆர் செல்வம்,

உள்ளாட்சி துறை இயக்குநர் திரு சக்திவேல், உழவர்கரை நகராட்சி ஆணையர் திரு சுரேஷ்ராஜ் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

*வானிலை*

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக வரும் 10-ஆம் தேதி வரை, தமிழகத்தில் ஓரிரு இடங்களில் புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. நாளை வரை கோவை மாவட்டத்தின் மலைப் பகுதிகள் மற்றும் நீலகிரி மாவட்டத்தின் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில் அதிக பட்சமாக நீலகிரி மாவட்டம் நடுவட்டம், கோவை மாவட்டம் சின்னக் கல்லார் உள்ளிட்ட இடங்களில், 2 சென்டிமீட்டர் மழை பதிவாகி உள்ளது.

*கிரிக்கெட்*

இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கு இடையே பெர்மிங்ஹாமில் நடைபெறும், ஆண்டர்சன்-டெண்டுல்கர் கோப்பைக்கான, 2-ஆவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 3-ஆம் நாளான இன்று, பகல் உணவு இடைவேளை வரை, இங்கிலாந்து அணி, தனது முதலாவது இன்னிங்சில், -------விக்கெட் இழப்பிற்கு, -------- ரன் எடுத்து இருந்தது. இந்திய அணியின் முதல் இன்னிங்ஸ் ஸ்கோர் 587 ரன்.

*காப்பீடு-புதுச்சேரி*

புதுச்சேரி அரசின் வேளாண் துறை, தனியார் காப்பீட்டு நிறுவனத்துடன் இணைந்து ஏற்பாடு செய்திருந்த, பயிர் காப்பீடு பற்றிய விழிப்புணர்வு முகாம் மங்கலம் கிராமத்தில் இன்று நடைபெற்றது. வில்லியனூர் மற்றும் ஒதியம்பட்டு உழவர் உதவியகத்திற்கு உட்பட்ட 50க்கும் மேற்பட்ட விவசாயிகள் இதில் கலந்து கொண்டு பயன் பெற்றனர். வில்லியனூர் உழவர் உதவியகத்தின் வேளாண் அலுவலர் திருமதி

உமாராணி உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் களப் பணியாளர்களும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு. நரேந்திர மோடி, 5 நாடுகள் பயணத்தின் 3ஆம் கட்டமாக இன்று, அர்ஜென்டினா செல்கிறார்.

டிரினிடாட்டில் வசிக்கும் ஆறாம் தலைமுறை இந்திய சமூகத்தினருக்கு, கடல்கடந்த இந்தியப் பிரஜைகளுக்கான OCI அட்டை வழங்கப்படும் என, பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்துள்ளார்

தேசிய காசநோய் ஒழிப்புத் திட்டத்தின் அமலாக்கத்தில், முன்னணி மாநிலமாக புதுச்சேரி மேம்பட்டுள்ளது.

புதுச்சேரியில் முதல் முறையாக, கார்டிலா என்னும் சுற்றுலா சொகுசு கப்பல், சென்னையிலிருந்து விசாகப்பட்டினம் வழியாக, இன்று புதுச்சேரி வந்துள்ளது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/04.07.2025/Script.

----------------------------